# கிறிஸ்தவம்

## தரம்

# 3

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்



சகல பாடநூல்களையும் இலத்திரனியல் ஊடாகப் பெற்றுக்கொள்வதற்கு
www.edupub.gov.lk வலைத்தளத்தை நாடுங்கள்.

முதலாம் பதிப்பு - 2017
இரண்டாம் பதிப்பு - 2018
மூன்றாம் பதிப்பு - 2019
நான்காம் பதிப்பு - 2020

முழுப் பதிப்புரிமையுடையது.

ISBN 978-955-25-0041-1

இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்காக,
இல. 90, வசனவத்தா, மத்தேகோடா
விஸ்வா கிராபிக்ஸ் அச்சகத்தினால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Published by : Educational Publications Department
Printed by : Vishwa Graphics (Pvt) Ltd.

# தேசிய கீதம்

*சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா*
*நமோ நமோ நமோ நமோ தாயே*

*நல்லெழில் பொலி சீரணி*
*நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா*
*ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்*
*நறுஞ்சோலை கொள் லங்கா*
*நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்*
*நமதுதி ஏல் தாயே*
*நம தலை நினதடி மேல் வைத்தோமே*
*நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா*
*நமோ நமோ நமோ நமோ தாயே*

*நமதாரருள் ஆனாய்*
*நவை தவிர் உணர்வானாய்*
*நமதேர் வலியானாய்*
*நவில் சுதந்திரம் ஆனாய்*
*நமதிளமையை நாட்டே*
*நகு மடி தனையோட்டே*
*அமைவுறும் அறிவுடனே*
*அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா*
*நமோ நமோ நமோ நமோ தாயே*

*நமதார் ஒளி வளமே*
*நறிய மலர் என நிலவும் தாயே*
*யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த*
*எழில்கொள் சேய்கள் எனவே*
*இயலுறு பிளவுகள் தமை அறவே*
*இழிவென நீக்கிடுவோம்*
*ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி*
*நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா*
*நமோ நமோ நமோ நமோ தாயே*

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

**ஆனந்த சமரக்கோன்**
கவிதையின் பெயர்ப்பு.

# முன்னுரை

பூகோளக் கிராமத்திற்கு நாளந்தம் சேர்க்கப்படும் வளமான புதிய அறிவு நமது கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் உள்ளடக்கப்படுவது அவசியமானதாகும். அத்தோடு நமது நற்பண்புகளையும் அதனுடன் ஒன்றிணைக்க நாம் மறந்துவிடக்கூடாது. இந்நேர் மனப்பாங்குகளைப் பாதுகாப்பதுடன் மேலும் சிறந்த ஒரு மாணவர் பரம்பரையை உருவாக்கும் மகத்தான பணிக்கு அவசியமான தரமான கற்றல் சாதனங்களை வழங்குவது எமது திணைக்களத்தின் பிரதான நோக்கம் என்பதை வலியுறுத்துகின்றேன்.

பாடவிடயத்திற்கு மேலதிகமாக பல உருக்களையும் மற்றும் சொற்களையும் கொண்டு ஆக்கப்பட்டுள்ள இப்பாடநூல்கள் எதிர்கால உலகத்திற்குச் செல்லும் பாதையின் ஒளிவிளக்குகள் போன்றனவாகும். நீங்கள் பாடசாலைக் கல்வியை முடித்து வெளியேறும்போது மகிழ்ச்சியுடன் நினைவுகூரக்கூடிய இனிமையான பல நினைவுகளை இப்பாடநூல்களின் பக்கங்கள் கொண்டிருக்கும் என்பது உறுதியாகும்.

ஆசிரியர்களிடம் இருந்து அறிவைப் பெற்றுள்ள உங்களுக்கு அறிவும் இரசனையும் நிறைந்த சிறந்த பரிசுப் பொருளான இப்பாடநூல்களின் சிறந்த பலன்களை அடைவதற்கான அறிவைத் தேடும் பயணத்தில் வீரநடை போடுவது அவசியமாகும். அரசாங்கம் பாடநூல்களுக்காகச் செலவிடுகின்ற பெருந்தொகைப் பணத்திற்கு விலைமதிப்பற்றதொரு பெறுமதியை மாணவர்களாகிய உங்களால் மட்டுமே வழங்க முடியும். வாழ்வில் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளை வெற்றிகரமாக முகங்கொடுத்து நாளைய உலகை மலரச்செய்வதற்கு நாட்டின் சிறார்களான உங்களுக்கு இயலவேண்டுமென அன்புடன் பிரார்த்திக்கின்றேன்.

இப்பாடநூலாக்கத்திற்கு அர்ப்பணிப்புடன் ஒத்துழைப்பு வழங்கிய எழுத்தாளர், பதிப்பாசிரியர் குழு அங்கத்தவர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எனது உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பீ. என். அயிலப்பெரும**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல
2020.06.26

**கண்காணிப்பும் மேற்பார்வையும்** : **பீ. என். அயிலப்பெரும**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**வழிகாட்டல்** : **டபிள்யூ. ஏ. நிர்மலா பியசீலி**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் (அபிவிருத்தி)
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**இணைப்பாக்கம்** : **ஆர். டீ. விஜேவிக்ரம**
பிரதி ஆணையாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

: **அ. ஞானேஸ்வரன்**
அபிவிருத்தி உதவியாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**பதிப்பாசிரியர் குழு** : **அருட்பணி. சி. பால்ராஜ்**
அதிபர்
பரி. தோமையர் கல்லூரி, பண்டாரவளை.

: **அருட்பணி. மிகிரி டி சில்வா சல்காது**
செயலாளர், கிறிஸ்தவ கல்வி மன்றம்
தேசிய கிறிஸ்தவ மன்றம், கொழும்பு.

: **ஸ்ரீயாணி ஹேமலதா பிரனாந்து**
அதிபர், மேமா / பிலி தம்மரத்ன வித்தியாலயம்
இந்திபெத்த, மொரட்டுவ.

**எழுத்தாளர் குழு** : **எம். பி. எஸ். பெரேரா**
ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர்
கிறிஸ்தவம்.

: **எஸ். பீ. சீ. பிரனாந்து**
ஆசிரியர்
வெஸ்லி கல்லூரி
கொழும்பு.

: **ஏ. கிதுமினி சல்காது**
ஆசிரியர்
மேம / நீர் / கட்டுநாயக்க மகா வித்தியாலயம்
கட்டுநாயக்க.

**மொழிப் பதிப்பாசிரியர்** : **எஸ். வடிவேல்**
ஆசிரியர்
இரத்தினபுரி தமிழ் மகா வித்தியாலயம்
இரத்தினபுரி.

**சித்திரம், அட்டை வடிவமைப்பு** : **பிரசாத் நிஷாந்த பீரிஸ்**
ஆசிரியர்
பரி. பீட்டர் கல்லூரி
கொழும்பு.


**சரவை பார்ப்பு** : **ச. அற்புதரூபன்**
ஆசிரியர்
கொ/குமர உதயம் தமிழ் வித்தியாலயம்
கிருலப்பனை.


**கணினி வடிவமைப்பு** : **நாகரட்ணம் சந்திரப்பிரியா**
கணினி உதவியாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

# பொருளடக்கம்



1. கடவுள் படைத்த உலகம் 2
2. உறவினர் மற்றும் அயலவரின் அன்பும் பாதுகாப்பும் 4
3. பாதுகாப்பு வழங்கும் கடவுள் 6
4. ஆண்டவரின் அற்புத உணவு 8
5. ஏலியின் வழிகாட்டலில் சாமுவேல் 11
6. சமாதான குமாரன் மாட்டுத்தொழுவத்தில் பிறத்தல் 14
7. சமாதானத்தைப் பரப்புவோம் 17
8. சமாதான அரசன் எருசலேமில் நுழைதல் 19
9. இறைவேண்டுதல் செய்வோம் 22
10. பிறருக்காக இறைவேண்டுதல் செய்வோம் 24
11. தூய ஆவியானவர் 26
12. நோவாவின் நேர்மையால் கடவுள் கருணை கிடைத்தல் 28
13. ஆபிரகாமும் லோத்தும் 32
14. கடவுளின் விருப்பத்துக்கு கீழ்ப்படிந்த யோசுவா 35
15. தானியேல் 39
16. இயேசுவைப் போன்று வாழ்வோம் 43
17. நாம் மன்னிப்பு வழங்குவோம் 47
18. திருவிவிலியம் 51
19. யோசேப்பு மன்னிப்பு வழங்குதல் 53
20. எனது வீரர் ஸ்தேவான் 57
21. வாழ்வுக்கு முத்துக்கள் 60

சிலுவை






திருவிவிலியம்



ஆலயம்

# 1 கடவுள் படைத்த உலகம்

## தொடக்க நூல் 1:1 - 2:1




இவ்வாறாகக் கடவுள் உலகை ஆறு நாட்களில் படைத்தார்.



***மனன வசனம்***

**தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்தார்.**

(**தொடக்கநூல்** 1:1)



## செயற்பாடு

பின்வரும் படைப்புக்களை கடவுள் எத்தனையாம் நாளில் படைத்தார் என்பதைக் கூட்டினுள் எழுதுங்கள்.

1. சூரியன், சந்திரன், விண்மீன் ☐
2. கடல், நிலம் ☐
3. ஒளி ☐
4. கால்நடைகள், காட்டு விலங்குகள், ஊர்வன ஆணும் பெண்ணும் ☐
5. வானம் ☐
6. நீர் வாழ் உயிரினங்கள், பறவைகள் ☐

# 2 உறவினர் மற்றும் அயலவரின் அன்பும் பாதுகாப்பும்



மார்கழி மாதத்தில் பல நாட்கள் தொடர்ந்து மழை பெய்தது. வழமை போன்று சிறோமியின் வீட்டருகில் வெள்ளம் வரத் தொடங்கியது. அம்மா, அப்பாவுடன் சேர்ந்து சிறோமி ஜெபம் செய்தாள். அயலவர் சிறோமியின் வீட்டிற்குள் தண்ணீர் வருவதைத் தடுப்பதற்கு முயற் சித்தனர். மழை தொடர்ந்தும் பெய்தமையால் சிறோமியின் சித்தப் பாவும் சித்தியும் இவர்களைத் தமது வீட்டுக்கு அழைத்துச் சென் றனர். அயலவர் வீட்டுப் பொருள்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தனர்.

சில நாட்களின் பின்னர் மழை ஓரளவு நின்றது. மழை நீர் சிறிது சிறிதாக வழிந்தோடியது. சிறோமியின் அப்பா தமது வீட்டுக்கு

வந்து வீட்டைச் சுத்தம் செய்ய ஆரம்பித்தார். அயலவரும் இணைந்து வீட்டைக் கழுவி சுத்தம் செய்ய உதவி செய்தனர். சிறோமி தனது பெற்றோருடன் வீட்டில் வாழ அனைவரும் உதவி செய்தனர்.

சிறோமியும் அம்மா, அப்பாவும் கடவுளின் முன்னிலையில் முழந்தாளில் நின்று வாழ்வையும் உடைமைகளையும் பாதுகாத்து வழங்கிய கடவுளுக்கு துதி செலுத்தினார்கள். ஆபத்தான நிலையில் அவர்களுக்கு உதவிய அயலவர், உறவினர்களுக்காக துதி செலுத்தினர். அவர்களை நேரில் சந்தித்து நன்றி கூறினர்.

**அயலவர் மற்றும் உறவினர்களால் கிடைக்கும் அன்புக்கும் பாதுகாப்புக்கும் கடவுளுக்கு துதி செலுத்துவோம்!**

***அன்பான தந்தையே,***

***நீர் எமக்கு தந்துள்ள பெற்றோருக்காக உமக்கு நன்றி செலுத்து கின்றோம். அதேபோன்று அயலவர், உறவினர்களுக்காகவும் நன்றி. அவர்களிடமிருந்து எமக்கு கிடைக்கும் அன்பு, பாதுகாப்பு, பராமரிப்பு, ஆதரவுக்காகவும் உமக்கு நன்றி.***

***ஆமென்.***



## செயற்பாடு

1. உறவினர்களாலும் அயலவர்களினாலும் அன்பும் பாதுகாப்பும் கிடைக்கும் சந்தர்ப்பங்களை சித்திரமாக வரைக.

# 3 பாதுகாப்பு வழங்கும் கடவுள்

**மத்தேயு 2:13-15**



இயேசு பிறந்த பின்னர் குழந்தை இயேசுவின் தந்தை யோசேப்புக்கு ஆண்டவருடைய தூதர் கனவில் தோன்றினார். குழந்தை இயேசுவுடனும் தாயாருடனும் எகிப்துக்கு செல்லுமாறு தூதர் அறிவித்தார். ஏனெனில் ஏரோது அரசன் இயேசுவைக் கொலை செய்யத் தேடுவதாக தூதர் அறிவித்தார்.

குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக் கொண்டு இரவிலேயே யோசேப்பு எகிப்துக்குப் புறப்பட்டுச் சென்றார். ஏரோது இறக்கும் வரை அவர் அங்கேயே இருந்தார்.

இவ்வாறாகக் கடவுள் குழந்தை இயேசுவுக்குப் பாதுகாப்பு வழங்கினார்.

கடவுள் எங்களை எப்போதும் பாதுகாக்கின்றார்.

**எம்மைப் பாதுகாக்கும் கடவுளுக்குத் துதி உண்டாவதாக!**

**அன்பான கடவுளே,**
**இன்றும் என்றும் என்னைப் பாதுகாத்தருளும்.**
**ஆமென்.**



## செயற்பாடு

பின்வரும் வாக்கியங்களை வாசித்து சரியாயின் சரி (✓) எனவும் பிழையாயின் பிழை (×) எனவும் அடையாளமிடுங்கள்.

1. குழந்தை இயேசுவை கூட்டிக் கொண்டு செல்லுமாறு ஆண்டவருடைய தூதர் அறிவித்தார். ( )
2. அவரை கலிலேயாவுக்கு அழைத்துச் செல்லுமாறு கூறினார். ( )
3. இரவில் அவர்கள் புறப்பட்டுச் சென்றனர். ( )
4. பார்வோன் அரசன் குழந்தை இயேசுவைக் கொலை செய்யத் தேடினான். ( )

# 4 ஆண்டவரின் அற்புத உணவு

**விடுதலைப் பயணம் 16:11-15**



டயனா : தாத்தா, மோசே இஸ்ரயேல் மக்களுடன் வாக்குப் பண்ணப்பட்ட நாட்டுக்குச் சென்ற பயணத்தின் இன்னுமொரு நிகழ்வொன்றினைக் கூறுங்களேன்.

தாத்தா : நல்லது, எகிப்தில் அடிமைகளாக வாழ்ந்த இஸ்ரயேல் மக்கள் செங்கடலைக் கடந்து சென்ற நிகழ்வைக் கூறியிருக்கின்றேன். அது உங்களுக்கு நினைவிருக் கின்றதா?

டேமியன் : ஆம் தாத்தா. அதன் பின்னர் என்ன நடைபெற்றது எனக் கூறுவீர்களா?

தாத்தா : இஸ்ரயேல் மக்கள் புறப்பட்டுப் பாலை நிலத்தில் பயணம் செய்தனர். அவர்களுக்கு அங்கு உணவு கிடைக்காமையால் ஆண்டவருக்கும் மோசேக்கும் எதிராக முறு முறுத்தனர்.

டயனா : அவர்கள் எவ்வாறு உணவைத் தேடிக் கண்டுப் பிடித் தார்கள்?

தாத்தா : ஆண்டவர் மோசேயை நோக்கி ''இஸ்ரயேல் மக்களின் முறையீடுகளை நான் கேட்டுள்ளேன்''. நீ அவர்களிடம் மாலையில் நீங்கள் இறைச்சி உண்ணலாம். காலையில் அப்பம் உண்டு நிறைவடையலாம் என்று சொல்'' என்றார்.

டேமியன் : அவர்களுக்கு உணவு கிடைத்தது எப்படி?

தாத்தா : புதுமையான நிகழ்வு இடம்பெற்றது. மாலையில் காடைகள் பறந்து வந்து கூடாரங்களை மூடிக் கொண்டன.

காலையில் பனிப்படலம் கூடாரத்தைச் சுற்றிப் படிந் திருந்தது. பனிப்படலம் மறைந்தபோது பாலை நிலப்பரப்பின் மேல் மென்மையான, தட்டையான, மெல்லிய உறைபனி போன்ற சிறிய பொருள் காணப்பட்டது.

டயனா : ஆ! அப்படியா? காலையும் மாலையும் மக்களுக்கு உணவு கிடைத்து விட்டது.

தாத்தா : மோசே அவர்களை நோக்கி 'ஆண்டவர் உங்களுக்குத் தந்த அப்பம் இதுவே!' என்றார். இஸ்ரயேல் மக்கள் அதற்கு 'மன்னா' எனப் பெயரிட்டனர். இது ஒரு புதுமையான நிகழ்வு.

டேமியன் : ஆண்டவர் இஸ்ரயேல் மக்களுக்கு மன்னாவையும் காடைகளையும் உணவாக வழங்கியது புதுமையானது.

தாத்தா : ஆண்டவரால் முடியாதது எதுவுமில்லை. அவர் இஸ்ரயேல் மக்களை மட்டுமல்ல எங்களையும் போஷித்து வருகின்றார்.

**ஆண்டவர் எங்களுக்கு உணவு தருகின்றார்!**



***மனன வசனம்***

**கடவுளே, உமக்கு நன்றி செலுத்துகின்றோம்; உமது பெயரைப் போற்றுகின்றோம்; உம் வியத்தகு செயல்களை எடுத்துரைக்கின்றோம்.**

**(திருப்பாடல்கள் 75:1)**



## செயற்பாடு

1. பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, இஸ்ரயேல் மக்கள் பாலைவனப் பயணத்தில் எதிர்நோக்கிய பிரச்சினை என்ன?
2. மக்கள் யாருக்கு எதிராக முறு முறுத்தனர்?
3. ஆண்டவர் காலையில் எதை உணவாகக் கொடுத்தார்?
4. ஆண்டவர் மாலையில் எதை உணவாகக் கொடுத்தார்?

# 5 ஏலியின் வழிகாட்டலில் சாமுவேல்

**1 சாமுவேல் 3:1-10**



சிறுவன் சாமுவேல் ஏலியின் மேற்பார்வையில் ஆண்டவருக்குச் சேவை செய்து வந்தார். அந் நாட்களில் ஆண்டவரின் வார்த்தை அரிதாக இருந்தது. அவரது காட்சியும் அவ்வளவாக இல்லை.

ஒரு நாள் ஏலி தம் உறைவிடத்தில் படுத்திருந்தார். கடவுளின் பேழை வைக்கப்பட்டிருந்த ஆண்டவரின் இல்லத்தில் சாமுவேல் படுத் திருந்தான். அப்பொழுது ஆண்டவர், 'சாமுவேல்' என்று அழைத்தார். அதற்கு அவன் ''இதோ அடியேன்'' என்று சொல்லி ஏலியிடம் ஓடி ''என்னை அழைத்தீர்களா?'' என்று கேட்டான். அதற்கு அவர் ''நான் அழைக்கவில்லை. திரும்பிச் சென்று படுத்துக்கொள்'' என்றார். ஆண்டவர் மீண்டும் சாமுவேலை அழைத்தார். அவன் மீண்டும் ஏலியிடம் என்னை அழைத்தீர்களா? என்று கேட்டான்.

மூன்றாம் முறையாக ஆண்டவர் 'சாமுவேல்' என்று அழைத்தார். அவன் எழுந்து ஏலியிடம் சென்று ''இதோ, அடியேன் என்னை அழைத்தீர்களா?'' என்று கேட்டான். அப்பொழுது சிறுவனை ஆண்டவர் தாம் அழைத்தார் என்று ஏலி தெரிந்து கொண்டார். பின்பு ஏலி சாமுவேலை நோக்கி, ''சென்று படுத்துக்கொள் உன்னை அவர் மீண்டும் அழைத்தால் அதற்கு நீ ஆண்டவரே பேசும். உம் அடியான் கேட்கிறேன் என்று பதில் சொல்'' என்றார்.

சாமுவேல் கீழ்ப்படிந்து தன் இடத்திற்குச் சென்று படுத்துக்கொண் டான். அப்போது ஆண்டவர் வந்து நின்று ''சாமுவேல், சாமுவேல்'' என்று முன்பு போல் அழைத்தார். அதற்கு சாமுவேல், 'பேசும், உம் அடியான் கேட்கிறேன்' என்று மறுமொழி கூறினான்.

சிறுவன் சாமுவேல் குருவான ஏலி கூறியதைப் போன்று செயற் பட்டதால் ஆண்டவர் அவனுடன் பேசினார். சிறு பிள்ளைகளாகிய நாமும் எப்போதும் ஆசிரியர் மற்றும் இறை பணியாளர்களின் வழிகாட்டலுடன் செயற்படப் பழகுவோம்.

**ஆசியர் மற்றும் இறைபணியாளர்களின் வழிகாட்டலை நாடுவோம்!**

**அன்பான இயேசுவே,**

**சிறுவன் சாமுவேல் குருவான ஏலியின் வழிகாட்டலுடன் செயற்பட்டது போன்று நாமும் ஆசிரியர்கள் மற்றும் இறைபணி யாளர்களின் வழிகாட்டலுடன் செயல்பட அருள் தாரும்!**

**ஆமென்.**



## செயற்பாடு

1. ஆண்டவர் சிறுவன் சாமுவேலுக்கு தோன்றி பேசிய நிகழ்வை சித்திரமாக வரையுங்கள்.

# 6 சமாதான குமாரன் மாட்டுத்தொழுவத்தில் பிறத்தல்

**லூக்கா 2:8 - 16**




உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக!
“வாருங்கள், நாம் பெத்லகேமுக்குப் போய் ஆண்டவர் நமக்கு அறிவித்திருக்கிற இந்த நிகழ்ச்சியைப் பார்ப்போம். வாருங்கள் போவோம்.
ஆம் இப்போதே செல்வோம்.
நல்லது

**சமாதான குமாரனாகிய இயேசு ஏழ்மையின் குழந்தையாக இவ்வுலகில் உதித்தார். உலகுக்கு வழங்கிய சமாதானத்தை பிறருக்கு பரப்புவோம்!**



### *மனன வசனம்*

"உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக!

(**லூக்கா** 2:14)



### செயற்பாடு

பின்வரும் பந்தியை வாசித்து, அடைப்புக்குறியில் காணப்படும் பொருத்தமான விடைகளைத் தெரிவுசெய்து இடைவெளிகளை நிரப்புங்கள்.

(நற்செய்தியை, தாவீதின், தீவனத் தொட்டியில், மெசியா, வானதூதர், அடையாளம்)

...................... அவர்களிடம், ''அஞ்சாதீர்கள் இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் ...................... உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகிய ........................ என்னும் மீட்பர் உங்களுக்காகத் ...................... ஊரில் பிறந்திருக்கிறார். குழந்தையைத் துணிகளில் சுற்றிக் ...................... கிடத்தியிருப்பதைக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு ......................'' என்றார்.

# 7 சமாதானத்தைப் பரப்புவோம்

**மத்தேயு 5:9**

பாடசாலையில் சமாதானத்தைப் பரப்புவோம்.



நீங்கள் இருவரும் அடித்து சண்டை இடுகையில் இருவருக்கும் வலிக்கின்றது அல்லவா?



சமாதானமாக இருக்கும்போது நாம் அனைவரும் மகிழ்வுடன் இருக்கலாம்.

**விளையாட்டு மைதானத்தில் சமாதானத்தைப் பரப்புவோம்.**



விதிகளை மீறி விளையாட்டில் வெற்றி பெறுதல் உண்மையான வெற்றி அல்ல



சமாதானத்தோடு விளையாடினால் மிகுந்த மகிழ்வு அடையலாம்.

**ஆலயத்திலும் பாடசாலை ஒய்வுநாளிலும் சமாதானத்தைப் பரப்புவோம்.**



ஐயோ! நீ என் பக்கத்தில் உட்கார வேண்டாம்.



ஏன்? நாம் அனைவரும் கடவுளுடைய பிள்ளைகள்

நாம் சமாதானத்தோடு வாழ்ந்தால் கடவுளின் பிள்ளைகள் என்று அழைக்கப்படுவோம்.

**நான் சமாதானத்தைப் பரப்பும் பிள்ளையாவேன்!**

**அன்பான இயேசுவே,**

**நாம் பிறருடன் சமாதானமாக வாழ்வதற்கு வரம் தாரும். சமாதானமற்ற சந்தர்ப்பங்களில் சமாதானத்தை உருவாக்கும் தூதராக செயற்பட எமக்கு வழிகாட்டியருளும்.**

**ஆமென்.**




## செயற்பாடு

1. இடைவெளிகளை நிரப்புங்கள்.
   ................. ஏற்படுத்துவோர் ............................... ஏனெனில் அவர்கள் ............................ மக்கள் என அழைக்கப்படுவர்.

2. மத்தேயு 5:9 எழுதப்பட்ட புத்தகக்குறி தயாரியுங்கள்.

# 8 சமாதான அரசன் எருசலேமில் நுழைதல்

லூக்கா 19: 35 - 38



ஆசிரியர் : இன்று, இயேசு அரசராக எருசலேமில் நுழைந்த நிகழ்வை நடித்துக் காட்டுவோம். பிள்ளைகளே! இந்த நிகழ்வு நினைவில் இருக்கின்றதா? இயேசு சிலுவையில் அறையப்படும் முன்னர் இறுதி வாரத்தில் இது இடம்பெற்றது.

பிள்ளைகள் : ஆம், ஆசிரியர் எமக்குக் கழுதைக் குட்டி ஒன்று தேவை அல்லவா?

ஆசிரியர் : உண்மையான கழுதைக் குட்டி தேவையில்லை. இரு பிள்ளைகள் முன்னால் வாருங்கள். நீங்கள் கழுதையைப் போல் நடித்துக் காட்டுங்கள்.
(பிள்ளைகள் இருவரும் கழுதையைப் போல அலங்காரம் செய்யப்படுதல்)

நிர்மலன் : எனக்கு இயேசுவைப் போன்று கழுதையின் மேலேறி உட்கார்ந்து செல்ல விருப்பம் ஆசிரியர்.

ஆசிரியர் : சரி! நிர்மலன் முன்னால் வாருங்கள். நிசித்தின் முதுகில் மீது கவனமாக ஏறுங்கள்.

(ஏனைய பிள்ளைகள் மக்கள் போன்று காணப்படுவர் அவர்கள் மேலுடைகளை கழுதைக்கு முன்பாக வழியில் விரிப்பார்கள்.)

பிள்ளைகள் : ''ஆண்டவர் பெயரால் அரசராய் வருகிறவர் போற்றப் பெறுக! விண்ணகத்தில் அமைதியும் மாட்சியும் உண்டாகுக!''

ஆசிரியர் : அன்று இயேசு எருசலேமில் அரசராக சென்ற பயணத்தை இன்று நாம் 'குருத்தோலை ஞாயிறு' எனக் கொண்டாடுகின்றோம். இயேசு குதிரையின் மீது அல்ல கழுதையின் மீது ஏறி வந்தார். அவர் உலக சமாதானத்தை கொண்டு வந்தார். அவரது தாழ்மைக் குணம் இந்த நிகழ்வின் ஊடாக எமக்கு வெளிப்படுகின்றது.

**சமாதானத்தின் அரசர் இயேசுவின் முன்மாதிரி வாழ்வைப் பின்பற்றி வாழ்வோம்!**



*மனன வசனம்*


"ஆண்டவர் பெயரால் அரசராய் வருகிறவர் போற்றப் பெறுக. விண்ணகத்தில் அமைதியும் மாட்சியும் உண்டாகுக!

(லூக்கா 19:38)



## செயற்பாடு

(1) குறுக்கெழுத்துப் புதிரை நிரப்புங்கள்.




**மேலிருந்து கீழ்**

1. இயேசு பவனி சென்ற இடம்
2. மக்கள் வழியில் விரித்தவைகள்

**இடமிருந்து வலம்**

3. இயேசு பவனி சென்ற மிருகம்

(2) குருத்தோலையில் சிலுவை ஒன்றை செய்து வீட்டில் தொங்கவிடுங்கள்.

# 9 இறைவேண்டுதல் செய்வோம்

**மாற்கு 6:46, லூக்கா 6:12**
**மத்தேயு 18:19-20**



நாம் கடவுளுடன் தொடர்பு கொள்வதற்கு சிறந்த முறை ஜெபம் செய்தல் ஆகும். நாம் தனிமையாக ஜெபம் செய்யலாம். அதே போன்று பிறருடன் இணைந்தும் இறைவேண்டுதல் செய்யலாம். இயேசு இவ்வுலகில் வாழும் காலத்தில் நாள்தோறும் ஜெபம் செய்தார். அவர் மலையுச்சியிலும் பாலைநிலத்திலும் தனிமையாக இறை வேண்டுதல் செய்தார். இதனூடாக அவர் கடவுளுடன் உறவை தொடர்ந்தும் வைத்திருந்தார்.

இயேசு, எமக்கு இணைந்து ஜெபம் செய்வதைக் கற்பித்துள்ளார். 'இரண்டு அல்லது மூன்று பேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாகக் கூடியிருக்கின்றார்களோ அங்கே அவர்களிடையே நான் இருக்கிறேன்' என இயேசு கூறியுள்ளார்.

இருவராக அல்லது சிலராக கடவுளிடம் வேண்டுதல் செய்யும்போது வேண்டுதல்களுக்கு கடவுள் செவி கொடுப்பதாக இறைவார்த்தையில் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

**நாம் தினமும் தனிமையாக அல்லது பிறருடன் சேர்ந்து இறை வேண்டுதல் செய்வோம்!**



***மனன வசனம்***

**உங்களுள் யாரேனும் துன்புற்றால் இறைவேண்டல் செய்யட்டும். மகிழ்ச்சியாயிருந்தால் திருப்பாடல்களை இசைக்கட்டும்.**

(**யாக்கோபு** 5:13)




## செயற்பாடு

1. உமது நண்பருக்காக இறைவேண்டுதல் ஒன்றினை எழுதுங்கள்.

# 10 பிறருக்காக இறைவேண்டுதல் செய்வோம்

**யோவான் 17:20**



பிள்ளைகளை நேசிக்கும் அன்பான இயேசுவே,
எம்மைப் போன்ற பிள்ளைகளுக்காக உம்மிடத்தில் இப்போது வேண்டுகின்றோம்.

பெற்றோரை இழந்து வாழும் நண்பர்களுக்கு நீர் பெற்றோராக வேண்டுமென வேண்டுகின்றோம்.

பட்டினியால் வாடும் பிள்ளைகளின் பசியைப் போக்குமாறு உம்மிடம் வேண்டுகின்றோம்.

நோயால் பீடிக்கப்பட்டிருக்கும் நண்பர்களுக்கு நீர் தெய்வீக மருத்து வராக சுகமளித்தருளும்.

எமது திருச்சபைக் குடும்பத்தில் இருக்கும் நண்பர், நண்பிகளுக்காகத் துதி செலுத்துகின்றோம். அவர்களால் எமக்குக் கிடைக்கும் மகிழ்வு, ஆறுதல் என்பனவற்றுக்காக நன்றி. அவர்களின் தேவைகளில் உதவ அருள்தாரும்.

வறுமையால் வாடும் பிள்ளைகளுக்கு உதவி செய்தருளும்.

போர் மற்றும் இயற்கை அனர்த்தம் போன்றவற்றால் பாதிக்கப் பட்டுள்ள பிள்ளைகளுக்கும் அருள்புரியும்.

உலகில் வாழும் அனைத்து சிறுவர்களையும் உமது பாதுகாப்பில் வைத்து நாம் எம்மை உம்மிடத்தில் ஒப்படைக்கின்றோம்.

ஆமென்!

**எமது தினசரி விண்ணப்பத்தில் பிறருக்காக வேண்டுதல் செய்வோம்!**



***மனன வசனம்***

**கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும். தேடுங்கள், நீங்கள் கண்டடைவீர்கள். தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும்.**

(**மத்தேயு** 7:7)



## செயற்பாடு

1. வகுப்பறையில் இறை வேண்டுதல் பெட்டியை வையுங்கள். வாரத்தில் ஒரு நாள் குழுவாக குறுகிய நேரம் இறை வேண்டுதல்களை ஏறெடுங்கள்.

# 11 தூய ஆவியானவர்

**கலாத்தியர் 5.22**

| பொறுமை | பரிவு | நன்னயம் |
|---|---|---|

நான் கடவுளுக்குச் சொந்தமான பிள்ளை. தூய ஆவியானவர் எனது உள்ளத்தில் வரும்போது எனது வாழ்வு வளமுறும்.

பிறரின் சில செயல்களைக் காணும் வேளையில் எனக்குக் கோபம் வருகின்றது. ஆனாலும் நான் **பொறுமையுடன்** செயல்படுவேன். பிறர் என்னில் பரிவு காட்டாவிட்டாலும் நான் அவர்களுக்குக் **கருணை** காட்டுவேன். தூய ஆவியானவரின் வழிகாட்டலால் **நற்செயல்**களை மென்மேலும் செய்ய முயற்சிப்பேன்.

இயேசுவின் பிள்ளையாக மேற்படி கனிகள் என் வாழ்வில் வெளிப்படுமென நம்புகிறேன்.

**நான் எப்போதும் தூயாவியானவருக்குக்**
**கீழ்படிவேன்!**
**நான் அவர் சொல்வதைக்**
**கேட்பேன்!**

அன்பான இயேசுவே,


அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம் போன்ற தூய ஆவியின் கனிகள் என்னில் வளர்ந்திட அருள்தாரும்.

ஆமென்!



## செயற்பாடு

கீழே வரையப்பட்டுள்ள புறாவுக்கு நிறந்தீட்டுங்கள். அலகில் தொங்கவிடப்பட்டுள்ள மட்டையில் நீங்கள் தூயாவியின் கனிகளை எழுதுங்கள்.



# 12 நோவாவின் நேர்மையால் கடவுள் கருணை கிடைத்தல்

**தொடக்கநூல் 6:9 - 7:10**



ஆசிரியர் : இன்று நாம் வேதாகமத்தில் காணப்படும் சிறப்பான ஒருவரைக் குறித்து அறிந்துகொள்வோம். இவர் வேதாகமத்தில் எமக்கு மிக முன்மாதிரியான சரிதைகளில் ஒருவர் ஆவர். அவர் தான் நேர்மையாளர் நோவா.

தீபன் : நேர்மையாளர் என்றால் யார்?

ஆசிரியர் : கடவுளுக்குள் நல்வாழ்வு வாழ்கின்றவர்கள் நேர்மையாளர் எனப்படுவர்.

முற்காலத்தில் நோவா எனப்படும் நேர்மையாளர் வளர்ந்தார். அவரது நற்பண்புகளால் ஆண்டவர் அவரை நேசித்தார். அவருக்கு இரக்கம் காட்டினார்.

ஒருநாள் கடவுள் நோவாவிடம், ''மண்ணுலகை வெள்ளத்தால் அழிக்கப் போகிறேன். உனக்காக ஒரு பேழையைச் செய். அதில் அறைகள் அமைத்து நீர் செல்லாதவாறு உள்ளேயும் வெளியேயும் கீல் பூசு என்றார்''.

''எல்லா உயிரினங்களிலிருந்தும் வகைக்கு இரண்டாக பேழைக்குள் கொண்டு வா'' என்றார்.
நோவா கடவுளின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார்.

காந்தன் : நோவா ஏன் கீழ்ப்படிந்தார்?

ஆசிரியர் : அவரது நேர்மை காரணமாகவே கீழ்ப்படிந்தார். சரி! கடவுள் நோவாவுக்கு ஆசிகள் வழங்கியதைப் பார்ப்போம். நீங்கள் அனைவரும் கடவுளுக்கு முன்னால் நேர்மையாளராக இருந்தால் எதுவித தீயவைகளும் உங்களை அணுகாது கடவுள் காப்பார்.

இராணி : ம்... ம்... அதன் பின்னர் என்ன நடந்தது?

ஆசிரியர் : பேழை செய்து முடித்து 7 நாட்களின் பின் மழைபெய்து வெள்ளம் ஏற்பட்டது.
(பிள்ளைகள் புதுமையாகப் பார்த்தல்)

கடவுள் நோவாவை ஆசீர்வதித்த விதத்தை இப்போது பார்ப்போம்.

நாற்பது நாட்களாக பெருவெள்ளம் மண்ணுலகில் வந்தது. நோவாவின் நேர்மையால் கடவுள் அவனையும் அவனுடன் இருந்த அனைவரையும் காப்பாற்றினார். அவன் மூலமாக புதிய உலகை உருவாக்கினார்.

கடவுளுக்கு சிறியவர்களாகிய நீங்களும் நேர்மையான நல் வாழ்வு வாழ்ந்தால் புதிய உலகைப் படைப்பதற்காக கடவுள் உங்களையும் தெரிவு செய்வார்.



**அன்பான கடவுளே,**


**நான் எனது வாழ்நாள் முழுவதும் உமக்குக் கீழ்ப்படிந்து வாழ்வேன். நல்ல பிள்ளையாக வாழ்வேன். நோவாவைப் போன்று உம்முடன் நாள்தோறும் கதைப்பேன்.**

**ஆமென்.**

## செயற்பாடு

1. பொருத்தமான சொற்களை கப்பலில் காணப்படும் சொற்களில் இருந்து தெரிவுசெய்து இடைவெளிகளை நிரப்புங்கள்.

தொடக்கநூல் 6:9




..................... குறித்த செய்தி இதுவே; ..................... தம் காலத்தவருள் நோவா ......................... ஆகவும் ......................... ஆகவும் இருந்தார். அவர் ......................... உடன் ......................... வாழ்ந்தான்.

# 13 ஆபிரகாமும் லோத்தும்

**தொடக்கநூல் 13:8-12**



## தாள லயம்

கதையைக் கேட்போம் பிள்ளைகளே,
கதையைக் கேட்போம் // ஆபிரகாம்
லோத்தின் கதையைக் கேட்போம் //

பயணம் செய்தனர் இருவரும் பயணம்
செய்தனர் //
எகிப்திலிருந்து பெத்தேலுக்கு பயணம்
செய்தனர் //

செல்வம் ஏராளம் ஆபிரகாமுக்கு செல்வம்
ஏராளம் //
மந்தை ஏராளம் லோத்துக்கு மந்தை
ஏராளம் //

சென்ற இடம் தானே போதவில்லை //
சொத்துக்கள் அதிகம் இடமும்
போதவில்லை,
சேர்ந்து அவர்கள் வாழமுடியவில்லை //

சண்டை வந்தது ஆமாம் சண்டை வந்தது //
மேய்ப்பருக்கும் இடையே சண்டை வந்தது
மந்தை மேய்ப்போர், லோத்தின் மந்தை
மேய்ப்போர், மந்தை மேய்ப்போர்,
ஆபிரகாமின் மந்தை மேய்ப்போர்
இருவருக்கும் இடையே சண்டை வந்தது //

சண்டை வேண்டாம், எமக்குள் சண்டை வேண்டாம் //
சொந்தக்காரர் நமக்குள் சண்டை வேண்டாம்



பிரிந்து செல் லோத்தே பிரிந்து செல் //
இடதுபக்கம் நீ சென்றாயானால்
வலதுபக்கம் நானும் சென்றிடுவேன்
ஆபிரகாம் நானும் சென்றிடுவேன்

லோத்தும் போனான் யோர்தானுக்கு //
செழிப்பான யோர்தானுக்கு //
ஆபிரகாம் வாழ்ந்தார், கானான் நாட்டில் //
கானான் நாட்டில் அவரும் வாழ்ந்திட்டார்.

சுயநலம் வேண்டாம், எம்மில் சுயநலம் வேண்டாம் //
லோத்தை போன்று எம்மில் சுயநலம் வேண்டாம் //

பொதுநலத்துடன் நாமே வாழ்ந்திடுவோம்.
நாமே வாழ்ந்திடுவோம்.

பிள்ளைகள் நாம், கடவுளின் பிள்ளைகள் நாம் //
ஒற்றுமையாய் வாழ்ந்திடுவோம்;
எப்போதுமே வாழ்ந்திடுவோம்.



***மனன வசனம்***

**எனக்கும் உனக்கும் என் ஆள்களுக்கும் உன் ஆள்களுக்கும் இடையே பூசல் ஏற்பட வேண்டாம். ஏனெனில் நாம் உறவினர்.**

(**தொடக்கநூல்** 13:8)



**செயற்பாடு**

1. பொருத்தமான விடையை தெரிவுசெய்து இணையுங்கள்.

| (அ) | (ஆ) |
|---|---|
| I. ஆபிரகாமின் உறவினர் | ஆபிரகாம் |
| II. பொதுநலத்துடன் செயற்பட்டவர் | யோர்தான் சமவெளி |
| III. லோத்து தெரிவுசெய்த இடம் | கால்நடை மேய்ப்போர் இடையே |
| IV. ஆபிரகாம் குடியேறிய இடம் | லோத்து |
| V. சண்டை ஏற்பட்டது | கானான் |

2. நீங்கள் பொதுநலமுடன் செயற்பட்ட நிகழ்வு ஒன்றினை எழுதி வரைந்து காட்டுங்கள்.

# 14 கடவுளின் விருப்பத்துக்குக் கீழ்ப்படிந்த யோசுவா

**யோசுவா 6:1 - 6, 20**




வேதாகமத்தில் இடம்பெற்றுள்ள உத்தம தலைவர்களுள் யோசுவாவும் ஒருவர் ஆவார். யோசுவாவைக் குறித்து வேதாகமத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

யோசுவாவின் தந்தையின் பெயர் நூன். அவர் கடவுளுக்குக் கீழ்ப்படிந்து நடந்த நல்ல தலைவன். அக்காலத்தில் எரிகோவைச் சுற்றி மதில் காணப்பட்டது.

மதில் பாதுகாப்புக்காக இறுக்கமாக அடைக்கப்பட்டிருந்தது.

ஒரு நாள் கடவுள் யோசுவாவிடம் 'எரிகோவை உங்கள் கைகளில் ஒப்படைப்பேன்' என்றார். கடவுள் யோசுவாவிடம் மிகப் பெரிய பொறுப்பை ஒப்படைத்தார்.

பெரிய மதிலை உடைத்து, வாக்குறுதி அளிக்கப்பட்ட நாட்டுக்குள் பிரவேசிக்கும் தலைமைத்துவப் பொறுப்பு யோசுவாவுக்கு வழங்கப் பட்டது. யோசுவா கடவுளின் கட்டளைக்குக் கீழ்ப்படிவுடன் செயற்பட்டார்.




யோசுவா ஆறு நாட்கள் எரிகோவின் மதிலை நாளுக்கு ஒருமுறை சுற்றிச் சென்றார். ஏழு குருக்கள் ஏழு எக்காளங்களை முழங்கிய வண்ணமாக மதிலைச் சுற்றினர்.




ஏழாம் நாள் எரிகோவின் மதிலை ஏழுமுறை சுற்றி வந்தனர்.

அன்று புதுமையான நிகழ்வு இடம் பெற்றது. மக்கள் ஆரவாரம் செய்தனர். எக்காளங்கள் முழங்கின. மக்கள் பேரொலி எழுப்பினர். மதில் இடிந்து விழுந்தது. யோசுவாவும் மக்களும் நகரத்துக்குள் நுழைந்தனர்.

பாருங்கள்! கடவுள் கூறியதற்கு யோசுவா கீழ்ப்படிந்தமையால் அன்று புதுமையான நிகழ்வு இடம்பெற்றது. எவ்வித ஆயுதங்களும் இல்லாமல் அவர்கள் இந்த மதிலைத் தகர்த்து நகருக்குள் நுழைந்தனர்.



## சிறுவர் நீங்களும் தலைவர்களே




கடவுள் உங்களுக்கு வெற்றியை வழங்குவார்.

**பாடுங்கள்.**

இயேசுவின் நாமத்தில்
ஜெயம் நமக்குண்டு - அல்லேலூயா
இயேசுவின் நாமத்தில்
கெட்ட ஆவிகளோடும்
கடவுளின் செயலை யாரால் சொல்லலாம்
கடவுளின் அன்பை யாரால் கூறலாம்
இயேசுவின் நாமத்தில்
ஜெயம் நமக்குண்டு.



**அன்பான கடவுளே,**

**சிறுவனாகிய நான் உங்களுக்குக் கீழ்ப்படிந்து வாழ்வேன். நீர் என்னுடன் பேசும். சிறுவனாகிய என்னையும் அழைத் தருளும். நான் உமக்குக் கீழ்ப்படிவான பிள்ளையாக வாழ்வேன் என உறுதியளிக்கின்றேன்.**

**ஆமென்.**



## செயற்பாடு

பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் சரி (✓) எனவும் பிழை யாயின் பிழை (×) எனவும் கூட்டினுள் அடையாளமிடுங்கள்.


1. யோசுவா கடவுளுக்குக் கீழ்ப்படிந்தார். ☐
2. அவர்கள் போருக்கு ஆயுதங்களை கொண்டு சென்றனர். ☐
3. ஏழாவது நாளில் மதில் உடைந்து விழுந்தது. ☐
4. ஏழாம் நாள் எரிகோவின் மதிலை ஏழு முறை சுற்றி வந்தனர். ☐
5. யோசுவா கடவுளின் விருப்பத்துக்குக் கீழ்ப்படிந்தார். ☐

# 15 தானியேல்


**தானியேல் 6:10-23**

பாபிலோனியா என்னும் நாட்டில் தாரியு எனும் அரசன் ஆட்சி செய்தான். அவன் யூதா நாட்டிலிருந்து தானியேல் என்பவனை பபிலோனியாவுக்கு சிறைப் பிடித்துக் கொண்டு வந்தான். தானியேல் நாள்தோறும் கடவுளிடம் விண்ணப்பம் செய்பவன். சில நாட்களின் பின்னர் அரசர் தனது அமைச்சர்களுள் ஒருவராக தானியேலை நியமித்தார். அதனால் சிலர் பொறாமைப்பட்டு தானியேலைக் கொலை செய்வதற்கு வழிதேடினர். அதற்காக அவர்கள் அரச னிடம் கூறி அரச கட்டளை ஒன்றைப் பிறப்பித்தனர். அதற்கேற்ப ‘‘முப்பது நாட்கள் முடியும்வரை அரசரைவிட வேறு தெய்வத்திடம் விண்ணப்பம் செய்ய முடியாது. அவ்வாறு செய்தால் சிங்கக் குகைக்குள் தள்ளப்படுவார்கள்’’ என்பதாகும்.

வழக்கப்படி தானியேல் நாள்தோறும் மூன்று முறை கடவுளிடம் மன்றாடுதல்




மனிதர்கள் வருகை தரல்



**தானியேலை அரசனுக்கு முன்னிலையில் நிறுத்தல்**




**அரசன் தானியேலைக் காப்பாற்ற வழிதேட நினைத்தல்**




**தானியேல் சிங்கக் குகைக்குள் தள்ளப்படுதல்**



**அரசன் தானியேலிடம் வருதல்**




**தானியேல் சிங்கக் குகையிலிருந்து கடவுளை வணங்குதல்**



**அரசன் வருதல்**




**தானியேலைக் குற்றம் சாட்டியவர்கள் சிங்கக் குகையில் தள்ளப்பட்டார்கள்.**



தானியேல் கடவுளை உறுதியாக நம்பியமையால் சிங்கக் குகையிலிருந்த சிங்கங்களிடமிருந்து கடவுள் தானியேலைக் காப்பாற்றினார்.

**அன்பான கடவுளே, நான் உம்மை விசுவாசிக்கிறேன். எவ்விதமான இடையூறுகள் ஏற்பட்டாலும் நான் உம்மை வணங்குவேன்.**

**ஆமென்.**



## செயற்பாடு

பொருத்தமான விடையை அடைப்புக் குறியில் தெரிவுசெய்து கோடிடுங்கள்.

1. பாபிலோனியாவில் வாழ்ந்த அரசன் (தானியேல், தாரியு)
2. அரசகட்டளை நிலவிய நாட்களின் எண்ணிக்கை (30, 3)
3. தானியேல் நாள்தோறும் (நான்கு முறை, மூன்றுமுறை) கடவுளிடம் மன்றாடினான்.
4. அரசன் தானியேலை சிங்கக் குகைக்குள் (விருப்பம் இல்லாமல், விருப்பத்துடன்) போட்டான்.
5. கடவுள் தானியேலை சிங்கங்களிடமிருந்து (காப்பாற்றினார், காப்பாற்றவில்லை)


# 16 இயேசுவைப் போன்று வாழ்வோம்!

**யோவான் 13:4-9**

**ஆசிரியர்** : நாம் இப்போது உண்மை நிகழ்வு ஒன்றை நடித்துக் காட்ட ஆயத்தப்படுகின்றோம். எல்லோரும் வட்டமாக உட்காருங்கள். நான் அந்த நிகழ்வைக் குறித்து சிறு அறிமுகம் செய்கின்றேன்.

> ‘இயேசுவின் இறுதி விருந்து’ என்ற நிகழ்வை நடித்துக் காட்டுவோம். யூதரின் பாஸ்கா விழாவுக்கு முன்னர் இயேசு தமது சீடர்களுடன் இறுதி இரவு உணவில் கலந்து கொண்டார். அந்த இரவு உணவானது சிறப்பானது.

முன்னர் ஆயத்தம் செய்தபடி இயேசுவின் இறுதி இரவு உணவின் போது நிகழ்ந்தவற்றை நடித்துக் காட்டல்.




(இரவு உணவின் பின் இயேசு தமது மேலுடையைக் கழற்றி வைத்து விட்டு, ஒரு துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டார்.

பின்னர் ஒரு குவளையில் தண்ணீர் எடுத்து சீடர்களின் காலடிகளைக் கழுவி இடுப்பில் கட்டியிருந்த துண்டால் துடைக்கத் தொடங்கினார். சீமோன் பேதுருவிடம் இயேசு வந்தபோது)

**பேதுரு** : ஆண்டவரே, நீரா என் காலடிகளைக் கழுவப் போகிறீர்? நீர் என் காலடிகளைக் கழுவ விடவே மாட்டேன்.

**இயேசு** : நான் உன் காலடிகளைக் கழுவாவிட்டால் என்னோடு உனக்குப் பங்கில்லை.



**பேதுரு** : அப்படியானால் ஆண்டவரே, என் காலடிகளை மட்டும் அல்ல, என் கைகளையும் தலையையும் கூடக் கழுவும். (நடித்தல் முடிவுறல்)

**ஆசிரியர்** : இந்த உண்மை நிகழ்வைப் பாருங்கள். இயேசு சீடர்களின் தலைவர். அவர்களின் ஆசிரியர்; இயேசு சீடர்களுக்கு முன்மாதிரியாக வாழ்ந்தார். இந் நிகழ்வில் இயேசுவில் வெளிப்பட்ட முன்மாதிரி என்ன?


செல்வம் : நாம் தாழ்மையாக இருக்க வேண்டும்.

அருள் : எல்லோரிடமும் கருணை காட்ட வேண்டும்.

சாந்தி : நாம் அகங்காரம் அற்றவர்களாக வாழ வேண்டும்.

ஆசிரியர் : சரி

**நீங்களும் இயேசுவைப் போன்று**



**இது உலகைத் தலைகீழாக மாற்றிய நிகழ்வு ஆகும். இயேசு கடவுளின் மகன். இருப்பினும் தமது சீடர்களின் காலடிகளைக் கழுவும் வண்ணம் தாழ்மை அடைந்தார். சிறுவர்களாகிய உங்கள் வாழ்வில் இயேசு வாழ இடமளியுங்கள்.**



## செயற்பாடு

சுருக்கமான விடை எழுதுங்கள்.

1. இறுதி இரவு உணவு வேளையில் இயேசுவின் முன் மாதிரியான செயல் என்ன?
2. இறுதி இரவு உணவில் இயேசுவுடன் கலந்து கொண்டவர்கள் யார்?
3. தனது காலடிகளைக் கழுவவிடாது தடுத்த சீடன் யார்?
4. மேற்படி நிகழ்வின் ஊடாக உமது வாழ்வில் ஏற்படுத்தக் கூடிய சிறப்பான பண்பு என்ன?
5. பின்வரும் வாக்கியங்களை வாசிப்போம். மனனம் செய்வோம்.

இயேசுவைப் போன்று,

- நான் தாழ்மையுடன் நடப்பேன்
- நான் பிறரில் கருணைகாட்டி வாழ்வேன்
- நான் அகங்காரம் அற்றவனாக இருப்பேன்

# 17 நாம் மன்னிப்பு வழங்குவோம்

**லூக்கா 23:24**



சனிக்கிழமை பகல் எமது வீட்டின் முன்னால் மணியோசை கேட்டது. அவ்வேளையில் நான் வீட்டு வேலைகளில் அம்மாவுக்கு உதவி செய்துகொண்டிருந்தேன். ''அம்மா எங்களுக்கு கடிதம் வந்துள்ளது'' என தங்கை சத்தமிட்டுக் கூறினாள்.

''ஆ! கடிதமா? ''என்று கூறி மாமாவிடமிருந்து கடிதத்தைப் பெற்றுக் கொண்டாள். முத்திரை மீது பண்டாரவளை என பதிக்கப்பட்டிருந்தது.



நான் விரைவாக கடிதத்தை உடைத்து வாசித்தேன். கடித இறுதியில் அருண் என ஒப்பமிடப்பட்டிருந்தது.

அருண் எனது வகுப்பு நண்பன். இது அவன் எழுதிய கடிதம்.

அன்பான அருள்,

அருள் உனது சுகம் எப்படி? உன்னிடம் கூறுவதற்கு விசேட செய்தி உள்ளது. நீ என்னுடன் கோபமா? நேற்று சித்தி நத்தாருக்கு எனக்குத் தந்த பேனையை நீ எடுத்தாய் என நினைத்தேன். நான் அதை நளினிடம் கூறினேன். ஆசிரியர் சாந்தியிடமும் கூறினேன். அருள் என்னை மன்னித்து விடு. நான் தவறு செய்துவிட்டேன். நேற்று நான் பண்டாரவளைக்கு வந்த பின்னர் புத்தகத்துக்கு இடையே பேனை இருப்பதைக் கண்டேன். உனது மனதை நான் அதிகம் துன்பப்படுத்தி விட்டேன். நான் அறியாமல் செய்த தவறு. நீ என்னுடன் கோபமா? என்னை மன்னிப்பாயா? உனது பதில் கடிதத்தை எதிர்பார்க்கிறேன்.

இறையாசிகள்.
உன்னுடைய நண்பன்
அருண்.

**அருளின் பதில் கடிதம்**

அன்பான அருண்,

நான் ஒருபோதும் உன்னுடன் கோபம் இல்லை. நான் உன்னை மன்னிக்கிறேன். எனக்குத் துக்கமாக இருந்தது. நான் உனக்காக விண்ணப்பம் செய்கிறேன். நாங்கள் என்றும் நல்ல நண்பர்களாக இருப்போம். விடுமுறை முடிந்தவுடன் கொழும்புக்கு வா. நான் உன்னை எதிர்பார்க்கிறேன்.


இப்படிக்கு,
அன்பான நண்பன்
அருள்.

ஆசிரியர் : இந்தக் கடிதத்தில் அன்பு வெளிப்படுகின்றது அல்லவா?

இன்று நான் இதைவிட அன்பான கதையைக் கூறுகின்றேன். எமது தவறுகளிலிருந்து எம்மை மீட்க இயேசு இந்த உலகத்துக்கு வந்தார். அவர் எந்தத் தவறும் செய்யாத இறைமகன்.

அன்று அவர் மக்களால் துன்புறுத்தப்பட்டு, வேதனை அனுபவித்து, கசையடிபட்டு, முள்முடி சூட்டப்பட்டு சிலுவையில் உயிர் நீத்தார். அவருக்கு எதிராக செயற்பட்டவர்களுக்கு பின்வருமாறு வேண்டுதல் செய்தார்.

**''தந்தையே இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை''.**



மேற்படி விண்ணப்பம் இயேசு சிலுவையில் கூறிய முதலாவது வாக்கு என கருதப்படுகின்றது.

எவ்விதக் குற்றமுமின்றி இயேசுவைக் கசையால் அடித்து சிலுவையில் அறைந்தவர்களுக்கு மன்னிப்பு வழங்குதல் எவ்வளவு சிறப்பானது? அன்று மக்கள் இயேசுவுக்கு ஆணி அடிக்கும்போது தவறு என்பதை உணரவில்லை. அவர்கள் அறியாமல் செய்த தவறை இயேசு மன்னித்தார்.

சிறுவர்களாகிய நீங்கள் தவறு செய்பவர்களை மன்னியுங்கள். தவறு செய்பவர்களுக்காக விண்ணப்பம் செய்யுங்கள்.

உங்கள் தவறுகளை இயேசு மன்னிக்கிறார். எனவே உங்கள் தவறு களை இயேசுவிடம் கூறி மன்னிப்புக் கேளுங்கள்.



## செயற்பாடு

1. உங்கள் விடைகளை கூட்டுக்குள் எழுதுங்கள்.
   i. உங்களுக்கு எதிராக குற்றம் செய்பவர்களை மன்னிக்க ஆயத்தமா? ☐
   ii. நீங்கள் அவர்களுக்காக விண்ணப்பம் செய்கிறீர்களா? ☐
2. உங்களுக்கு எதிராக தவறு செய்தவர்களுக்கு நீங்கள் மன்னிப்பு வழங்கிய இரு சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.
3. இயேசுவின் முதலாவது சிலுவை வாக்கை அப்பியாசப் புத்தகத்தில் எழுதுங்கள்.
4. உங்களுக்கு எதிராகத் தவறு செய்தவர்களை நீங்கள் மன்னித்த நிகழ்வை சித்திரமாக வரையுங்கள்.


கடவுளே,

உமது பேரன்புக்கேற்ப
எனக்கு இரங்கும்.

திருப்பாடல் 51:1


# 18 திருவிவிலியம்

உலகில் வாழும் கிறிஸ்தவர்களின் புனித நூல் திருவிவிலியம் ஆகும். திருவிவிலியத்தில் 66 நூல்கள் காணப்படுகின்றன. உலகில் அதிகம் விற்கப்படும் நூல் திருவிவிலியம் ஆகும்.



பல நூல்கள் திருவிவிலியத்தில் காணப்படுவதனால், திருவிவிலியம் ஒரு நூலகம் என்று கருதப்படு கின்றது.

உலகிலேயே அதிக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள நூலாகவும் திருவிவிலியம் காணப்படுகின்றது.



66 புத்தகங்கள்

| பழைய ஏற்பாடு | புதிய ஏற்பாடு |
|---|---|
| 39 புத்தகங்கள் | 27 புத்தகங்கள் |

திருவிவிலியத்தின் மூலம் நாம் கடவுளை அறிந்து கொள்ளலாம். திருவிவிலியத்தினூடாக கடவுள் எம்மோடு உரையாடுகிறார். திருவிவிலியம் பெறுமதி மிகுந்த ஒரு நூலாகும். எனவே, திரு மறையை நாம் கௌரவத்துடன் பயன்படுத்த வேண்டும்.

திருவிவிலியம் எமது வாழ்வுக்கு வழிகாட்டும் ஆசிரியர் போன்றது.

எனவே, நாள்தோறும் திருவிவிலியத்தை நாம் வாசிப்போம். நாள்தோறும் இறைவேண்டல் செய்வோம்.

நாம் திருவிவிலியத்துக்கு ஏற்ப எமது வாழ்வைச் சீராக்கி கடவுளுக்கு விருப்பமான பிள்ளையாக வாழ்வோம்.

**நாம் இறைவேண்டல் செய்வோம்.**

**அன்பான தந்தையே,**
**திருவிவிலியம் மூலம் எமக்குக் கிடைக்கும் அனைத்து ஆசீர் வாதங்களுக்கும் உமக்கு நன்றி செலுத்துகிறோம்.**

**ஆமென்.**



## செயற்பாடு

(1) i. திருவிவிலியத்தில் காணப்படும் நூல்கள் எத்தனை?
ii. பழைய ஏற்பாட்டு நூல்கள் எத்தனை?
iii. புதிய ஏற்பாட்டு நூல்கள் எத்தனை?

(2) கடவுள் எம்முடன் எதன் மூலமாக கதைக்கிறார்?

(3) திருவிவிலியத்தை உமது வாழ்வின் ஒரு பங்காக்கும் முறைகள் எவை?

# 19 யோசேப்பு மன்னிப்பு வழங்குதல்

**தொடக்கநூல் 50:15-21**

திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள யோசேப்பு எமக்கு முன்மாதிரியும் வாழ்வுக்கு வழிகாட்டலையும் வழங்கும் சிறப்பான ஒருவர் ஆவர். யோசேப்பின் சகோதரர்கள் அவருக்கு அதிக தீயவைகளைச் செய்தார்கள். அவர்கள் யோசேப்பை மிதியான் நாட்டு வணிகருக்கு விற்றனர். அவர்கள் யோசேப்பை பார்வோனின் அதிகாரிகளுள் ஒருவரான போத்திபாரிடம் விற்றனர். எகிப்தில் யோசேப்பு செய்த அனைத்திலும் கடவுள் வெற்றியைக் கொடுத்தார். எகிப்திய அரசன் பார்வோனுக்கு அடுத்த உயர் அதிகாரியாக யோசேப்பு நியமிக்கப்பட்டார்.

சில நாட்களுக்குப் பின்னர் உலகில் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. யோசேப்பின் சகோதரர்கள் உணவு பெறுவதற்கு எகிப்துக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அவர்களின் தந்தை யாக்கோபு இறந்தபின், யோசேப்பு தம்மைப் பழிவாங்குவார் என்று அவர்கள் பயந்தனர். இவ்வாறு பயந்த சகோதரர்கள் யோசேப்புக்குச் செய்தி அனுப்பி கூறியதாவது, ''உம் தந்தை இறப்பதற்கு முன் உன் சகோதரர்கள் உனக்குத் தீங்கிழைத்ததன் மூலம் உண்டான குற்றப்பழியையும் பாவத்தையும் மன்னித்து விடு''

இந்தச் செய்தியை கேள்வியுற்றதும் யோசேப்பு மிகவும் துக்கப்பட்டு அழுதார். தமது சகோதரருக்கு எவ்வித தீமையும் செய்ய யோசேப்பு எண்ணியிருக்கவில்லை. உடனே, யோசேப்பு தமது சகோதரர்களை அழைத்து அவர்கள் செய்த தீமைகளை மறந்து, மன்னிப்பு வழங்கினார்.



யோசேப்பு சகோதரர்களிடம்,

‘‘அஞ்சாதீர்கள் நான் கடவுளுக்கு இணையானவனா? நீங்கள் எனக்குத் தீமை செய்ய நினைத்தீர்கள்; ஆனால் கடவுள் அதை இன்று நடப்பது போல், திரளான மக்களை உயிரோடு காக்கும் பொருட்டு நன்மையாக மாற்றிவிட்டார். உங்களையும் உங்கள் குழந்தைகளையும் நான் பேணிக்காப்பேன்’’, என்றார்.

தொடக்கநூல் 50:19

**யோசேப்பின் வாழ்வின் மூலமாக எமக்குக் கிடைக்கும் முன்மாதிரிகள்.**

| யோசேப்பு | யோசேப்பு போன்று நான் |
|---|---|
| ♦ தமது சகோதரரின் தவறை மறந்தார். | ♦ எனக்கு எதிராக தவறு செய்பவர்களின் தவறுகளை மறப்பேன். |
| ♦ சகோதரருக்கு மன்னிப்பு வழங்கினார். | ♦ எனக்கு எதிராக தவறு செய்பவர்களுக்கு மன்னிப்பு வழங்குவேன். |
| ♦ சகோதரருக்கு மன்னிப்பு வழங்கி அவர்களைப் பாதுகாத்தார். | ♦ எனது சகோதரருக்கு மன்னிப்பு வழங்கி அவர்களைப் பாதுகாப்பேன். |



**அன்பான ஆண்டவரே**

**எனக்கு எதிராக செய்யப்படும் தீமைகளை மறந்து மன்னிப்பு வழங்குவேன் என உறுதி அளிக்கிறேன். அவர்களைப் பேணி பாதுகாப்பேன். யோசேப்பின் முன்மாதிரியுடன் வாழ சிறுவனாகிய எனக்கு அருள்தாரும்.**

**ஆமென்.**

## செயற்பாடு

1. பின்வரும் நிகழ்வுகளைப் பெயரிடுங்கள்.



..................................................



..................................................



..................................................

2. உமக்கு எதிராக தவறு செய்தவர்களுக்கு மன்னிப்பு வழங்கிய மூன்று நிகழ்வுகளைக் குறிப்பிடுக.

# 20 எனது வீரர் ஸ்தேவான்

**திருத்தூதர் பணிகள் 7:59-60**



எனது பெயர் சாந்தினி. நான் மூன்றாம் வகுப்பில் படிக்கிறேன். நான் இரவு நித்திரைக்குச் செல்வதற்கு முன்னர் அம்மா திருவிவிலியக் கதைகளைக் கூறுவது வழக்கம். எனக்கு இரசனைமிக்க கதைகள் கேட்பதற்கு அதிக விருப்பம். நான் கேட்ட கதைகள் கனவிலும் எனக்குத் தோன்றும்.

நேர்மையாளராக வாழும் ஸ்தேவான் என கற்பனை செய்து கொள்ளுங்கள். கல்லெறிந்து கொலை செய்யப்படும் வேளையில் அவர்களை மன்னித்தார்.

முழந்தாளிட்டபடி வானம் திறந்து காணப்பட்ட மரண வேளையில் மன்னிப்பு வழங்கியவர்.



சாந்தினி : ஸ்தேவான் என்பவர் யார் அம்மா?

அம்மா : ஸ்தேவான் கடவுள் நம்பிக்கை நிறைந்தவர். கடவுளின் ஆசிகள் பல பெற்றவர். அத்துடன் அவர் அருளும் வல்லமையும் நிறைந்தவராய் மக்களிடையே பெரும் அருஞ்செயல்களையும் செய்து வந்தார். ஸ்தேவான் கடவுளுக்குச் செய்த பணியின் நிமித்தம் அவரைப் பிடித்து பொய்க் குற்றம் சாட்டி, அவரைக் கொலை செய்தனர்.



அம்மா : மகளே! அவர் மீது கல்லெறிந்தபோது அவர் ''ஆண்டவராகிய இயேசுவே, எனது ஆவியை ஏற்றுக்கொள்ளும்''. என்று வேண்டிக் கொண்டார். பின்பு உரத்த குரலில் ''ஆண்டவரே, இந்தப் பாவத்தை இவர்கள் மேல் சுமத்தாதேயும்'' என்று சொல்லி உயிர்விட்டார்.

சாந்தினி : ஸ்தேவான் மிகவும் புதுமையான ஒருவர் அல்லவா அம்மா!

அம்மா : மகளே, எமது வாழ்வில் எவ்வித பிரச்சினைகள் வந்தாலும் ஸ்தேவான் செயற்பட்டது போல நாமும்

செயற்பட வேண்டும். ஸ்தேவானின் வாழ்வு எமக்கு மிகப் பெரிய முன்மாதிரி ஆகும். எதிரிகள் தம்மைக் கொலை செய்யும் வேளையில் அவர்களுக்கு மன்னிப்பு வழங்கினார். அவருடைய இறுதி விண்ணப்பம் வல்லமை நிறைந்தது. தம்மைத் துன்பப்படுத்தியவர்களுக்கு மன்னிப்பு வழங்குமாறு வேண்டினார்.

சாந்தினி : அம்மா, இது அழகான கதை நானும் ஸ்தேவானைப் போன்று வாழ்வேன் அம்மா.





**செயற்பாடு**

1. பின்வரும் படத்தை நிறந்தீட்டுங்கள்.



2. ஸ்தேவானிடம் காணப்பட்ட கிறிஸ்தவ நற்பண்புகள் இரண்டைப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்.

# 21 வாழ்வுக்கு முத்துக்கள்

**2 திமொத்தேயு 3:15-16**



உலகில் காணப்படும் புனித நூல் திருவிவிலியம். சிறுபராயம் தொடங்கி திருவிவிலியத்தை வாசிப்பதால் எமது வாழ்வு ஒளி பெறும். நல்வாழ்வு வாழ வழிகாட்டும். நாள்தோறும் திருவிவிலியத்தை வாசித்து வாழ்வின் வழிகாட்டியாக்கி நல்வாழ்வு வாழும் பிள்ளையாக இருப்பேன்.

திருவிவிலியம் வாசிப்பதால்



நல்வாழ்வின் வழிகாட்டல்களை கற்றுக்கொள்ள முடியும்.

இயேசுவில் விசுவாசம் வளர்ச்சி அடையும்.


**தினமும் திருவிவிலியத்தை வாசிப்பதால் எமது வாழ்வுக்கு கிடைக்கும் முத்துக்கள்.**





1. இயேசுவைக் குறித்துக் கற்றல்
2. இயேசுவின் விருப்பத்துக்குக் கீழ்ப்படிதல்
3. நல்ல கிறிஸ்தவ பிள்ளையாகுதல்
4. பிரச்சினைகளை எதிர் நோக்கும் வல்லமை பெறல்
5. தீமைகளை அகற்றுதல்
6. தீயவைகளிலிருந்து விடுபடல்
7. விண்ணரசு குறித்து கற்றுக்கொள்ளல்
8. இயேசுவின் அன்பான பிள்ளையாகுதல்










## மனன வசனம்

என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு.



என் பாதைக்கு ஒளியும் அதுவே.

திருப்பாடல் 119:105





## செயற்பாடு

1. சுருக்கமான விடை எழுதுங்கள்.


i. நீங்கள் நாள்தோறும் திருவிவிலியத்தை வாசிக்கின்றீர்களா?

..................

ii. திருவிவிலியத்தில் உங்கள் உள்ளத்தைக் கவர்ந்த மூன்று நிகழ்வுகளை குறிப்பிடுங்கள்.

- ..............................................................
- ..............................................................
- ..............................................................

2. மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள உருவில் திருவிவிலியம் என்ற எழுத்துக்களை கண்டுபிடித்து நிறந்தீட்டுங்கள்.


ம்
ம
ய
லி
த
வி
ர
வி
தி
க
ரு
ப
ஆரம்பம்